**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலன்– 2014–15 ஆம் ஆண்டிற்கான பகுதி–II திட்டம்– பார்வைத்திறன் குறைபாடுடையோருக்கு புத்தகங்களை விரைவில் படிப்பதற்கு ஆஞ்செல் ப்ரோ (Angel Pro) என்னும் உயர்தொழில்நுட்ப உதவி உபகரணங்கள் ரூ.12.50 இலட்சத்தில் வாங்கி வழங்குதல்– நிதி ஒப்பளிப்பு செய்வது– ஆணை– வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(நிலை) எண்.50

நாள்:01–09–2014
ஜய, ஆவணி 16,
திருவள்ளுவர் ஆண்டு 2045

படிக்க:

1. அ.சா.கு எண்.13753/மா.தி.ந.3/2013–5, நாள் 27.05.2014.
2. நிதித் துறையிடமிருந்து பெறப்பட்ட 2014–15ஆம் ஆண்டிற்கான பகுதி–II திட்ட பட்டியல்.

–––––––

**ஆணை:**

மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், 2014–15 பகுதி–II திட்டத்திற்கென சமர்ப்பித்த கருத்துருவில், பார்வைத் திறன் குறையுடையோருக்கு புத்தகங்களை விரைவில் படிப்பதற்கு ஏதுவாக உயர்தொழில்நுட்ப உதவி உபகரணங்கள் வாங்கி வழங்குவது மற்றும் பயன்கள் குறித்து பின்வருமாறு தெரிவித்துள்ளார்:-

பார்வைத்திறன் குறைபாடுடையோர் மற்றும் குறை பார்வை உடையோர்களுக்கு உயர்தொழில்நுட்ப உதவி உபகரணங்கள் அதிக அளவில் தயாரிக்கப்படுவதாகவும், 'ஆஞ்செல் ப்ரோ' என்ற தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள், பார்வைத்திறன் குறைபாடுடையோர் மற்றும் குறைபார்வை உடையோர் புத்தகங்களை மிக விரைவில் படிப்பதற்கும், தேடுவதற்கும், தலைப்புகள் வாரியாக படித்து தனது கற்கும் திறனை அதிகரிக்கவும் மிகவும் பயனுள்ளதாக அமையும் என்றும், பார்வைத் திறன் குறையுடையோர்களுக்கு தடையற்ற சூழலை ஏற்படுத்தவும் அவர்களின் செயல் திறன்களை அதிகரிக்கவும்,ரூ. 12.50 இலட்சங்கள் செலவில் உயர் தொழில் நுட்ப உபகரணங்கள் வாங்கி வழங்கலாம் என தெரிவித்து, இத்திட்டத்திற்கென நிதி ஒப்பளிப்பு வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை நன்கு பரிசீலனை செய்த அரசு, அதனை ஏற்று 2014–15ம் ஆண்டிற்கான பகுதி–II திட்டத்தின் கீழ், பார்வைத்திறன் குறையுடையோர் பயன்பெறும் வகையில் அவர்களுக்கு "ஆஞ்செல் ப்ரோ" (Angel Pro) என்னும்,

உயர்தொழில்நுட்ப உதவி உபகரணங்கள் ரூ.12.50 இலட்சம் (ரூபாய் பன்னிரெண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) செலவினத்தில் வாங்கி வழங்கிட நிதி ஒப்பளிப்பு செய்தும் இச்செலவினத்தினை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி வழங்கியும் அரசு ஆணையிடுகிறது. மேலும், இத்தொகையினை மேலே குறிப்பிடப்பட்டுள்ள நேர்வுக்காக மட்டுமே செலவினம் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும், மீதித் தொகை / கூடுதல் தொகை ஏதேனும் இருப்பினும் அதனை அரசுக் கணக்கில் திரும் செலுத்துமாறும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

3. மேலே பத்தி2–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினம் கீழ்காணும் கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

2235–சமூக பாதுகாப்பு நலனும்–02 சமூக நலன்– 101– மாற்றுத் திறனாளிகள் நலன்– பன்னிரெண்டாவது ஐந்தாண்டு திட்டப் பணிகள்– II மாநிலத் திட்டம் – JH –மாற்றுத் திறனாளிகளக்கான மறுவாழ்வுத் திட்டம் 24. பொருள்களும் வழங்கலும்.
(தா.தொ.கு. 2235–02–101–JH-2404)

4. இவ்வாணை நிதித் துறையின் இசைவுடன் அத்துறையின் அ.சா.எண்.31895/நிதி(சந)14, நாள்16.6.14–ன்படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பொ. சிவசங்கரன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.
தலைமைக் கணக்காயர், சென்னை–18.
தலைமைக் கணக்காயர், சென்னை–18. (பெயரில்)
**நகல்:**
நிதி (சந)த் துறை, சென்னை–9.
அரசு முதன்மைச் செயலாளர் ( மாற்றுத் திறனாளிகள் நலத் துறை) அவர்களின் முதுநிலை தனிச் செயலாளர், சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.